இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (07.03.2025) சென்னை, கீழ்ப்பாக்கம், காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்று வரும் கூடுதல் வகுப்பறை கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்தார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.பிரியா ராஜன் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் திருமதி சி.ஹரிப்ரியா, பள்ளி தலைமை ஆசிரியை திருமதி ஜெயந்தி வரதராஜன் ஆகியோர் உள்ளனர்

ரூ.2.39 கோடி மதிப்பீட்டில் சைதாப்பேட்டை தொகுதி, பஜார் சாலை, ஜீனிஸ் சாலை பகுதிகளில் மழைநீர் வடிகால்கள் கட்டுமானப் பணிகள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை,மார்ச்.8- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (07.03.2025) சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு 142க்குட்பட்ட பஜார் சாலை மற்றும் ஜீனிஸ் சாலை ஆகிய பகுதிகளில் ரூ.2.39 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்கள் கட்டுமானப் பணியினை தொடங்கி வைத்தார்கள். பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு சென்னையில் உள்ள அனைத்து தெருக்களிலும் எங்கெயெல்லாம் மழைநீர் தேக்கம் இருக்கின்றதோ அந்த இடங்களை எல்லாம் கண்டறிந்து அந்தப் பகுதியில் புதிய மழைநீர் வடிகால்வாய்களை கட்டுவது, இணைப்புக் கால்வாய்களை ஏற்படுத்துவது, ஏற்கெனவே இருக்கின்ற கால்வாய்களை சீர்படுத்துவது என்று பல்வேறு பணிகளை தொடங்குவதற்கு ஏதுவாக ஓய்வு பெற்ற IAS அலுவலர் திரு புகழ் தலைமையில் குழு ஏற்படுத்தி அதிக வெள்ளப் பாதிப்புகள் இருக்கின்ற பகுதிகளை கண்டறிந்து அதற்கான தீர்வு காண்பதற்கு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினர் மிகச் சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து அரசிற்கு பரிந்துரைகளை சமர்ப்பித்தார்கள். அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் உலக வங்கி, சிங்கார சென்னை 2.0, நீர்வளத்துறை நிதி, வெள்ள நிவாரண நிதி போன்ற பல்வேறு நிதி ஆதாரங்களுடன் தொடர்ந்து கடந்த 4 ஆண்டுகளாக பல்வேறு பணிகள் நடைபெற்று முடிந்திருக்கிறது. அந்தவகையில் சென்னை இதற்கு முன்னாள் எல்லாம் 4 செ.மீ அளவிற்கு மழை பெய்தால் கூட பெரிய அளவிலான வெள்ள பாதிப்புகள் இருக்கும். ஆனால் கடந்த ஆண்டு பெய்த மிகப் பெரிய அளவிலான மழை ஒரே நாளில் ஏறத்தாழ 18 செ.மீ அளவிற்கு மழை பெய்தாலும் கூட 24 மணி நேரத்தில் மழை பெய்த சுவடே தெரியாத நிலை சென்னை மாநகரம் மிகப் பெரிய மாற்றத்தை பெற்றது. ஆக இதற்கு காரணம் 1027.85 கோடி மதிப்பீட்டில் 302.47 கி.மீ நீளத்திற்கு புதிய மழைநீர் வடிகால் வாய்கள் அமைக்கப்பட்டது. கொசஸ்தலை பேசின் திட்டத்தைப் பொறுத்தவரை ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் ரூ.2,375 கோடி மதிப்பீட்டில் 510 கி.மீ தூரத்திற்கான மழை நீர் வடிகால்வாய்கள் கட்டும் பணி முடிவுற்றிருக்கிறது. கோவளம் பேசின் திட்டத்தைப் பொறுத்தவரை ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் ரூ.510 கோடி செலவில் 151 கி.மீ தூரத்திற்கு மழை நீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. ஒட்டுமொத்தமாக கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு நிதி ஆதாரங்களுடன் ரூ.3,913 கோடி மதிப்பீட்டில் 964.06 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய்கள் கட்டி முடிக்கப்பட்டது. மேலும் தற்போது ரூ.34.73 கோடி மதிப்பீட்டில் 26.18 கி.மீ நீளத்திற்கு புதிய மழைநீர் வடிகால்வாய்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்படி பல்வேறு பணிகள் நடைபெற்று முடிந்திருக்கும் காரணத்தினாலும் மழைக்காலங்களில் மக்கள் அதிக பாதிப்பு அடையாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

சைதாப்பேட்டை தொகுதியைப் பொறுத்தவரை சிறிய அளவில் மழை பெய்தாலும் கூட திருவள்ளுவர் தெரு, சுப்பிரமணிய சாலை, ஜோதிராமலிங்கம் நகர், சாரதிநகர் போன்ற பல்வேறு பகுதிகளில் பெரிய அளவிலான மழை பாதிப்புகள் இருந்தது. கடந்த 3 ஆண்டுகளில் கட்டப்பட்ட மழைநீர் வடிகால்வாய்கள் மூலமாக இந்தப் பகுதிகளில் மழைநீர் பாதிப்புகள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. அண்ணாசலையில் மெட்ரோ இரயில் திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காரணத்தினால் நெடுஞ்சாலைத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாய்கள் துண்டிக்கப்படும் நிலை ஏற்பட்டது. அதனால் சைதாப்பேட்டையைப் பொறுத்தவரை, ஜீனிஸ் சாலை, பஜார் சாலை போன்ற பகுதிகளில் கடந்த 3 ஆண்டுகளாகவே மழைநீர் தேக்கம் என்பது இருந்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி நிர்வாகம், ரூ.2.39 கோடி மதிப்பீட்டில் இந்த இரண்டு சாலைகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள் கட்டும் பணியினை தொடங்கியிருக்கிறது. பஜார் சாலையில் ரூ.1.22 கோடி மதிப்பீட்டில் 4க்கு 4 என்கின்ற அளவில் மழை நீர் வடிகால்வாய் 215 மீ தூரத்திற்கும், ஜீனிஸ் சாலையில் ரூ.1.17 கோடி மதிப்பீட்டில் 3க்கு 3 என்கின்ற அளவில் மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. சைதாப்பேட்டை பகுதியில் ஏறத்தாழ 53 தெருக்களில் ரூ.43.76 கோடி மதிப்பீட்டில் 10.75 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய்கள் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. தற்போது சைதாப்பேட்டை பகுதியில் மழை நீர் தேக்கம் பெரிய அளவில் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. நடப்பு நிதியாண்டில் 2.94 கி.மீ நீளத்திற்கு ரூ.15.08 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிவால்வாய்கள் அமைப்பதற்கு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் மிக விரைவில் தொடங்கப்படவிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல் 139வது வட்டத்தில் உள்ள ஜாபகர்கான் பேட்டை கால்வாய் திறந்த நிலையில் உள்ளதால் இரு பக்கமும் தடுப்பு சுவர் கட்டுவதற்கு ரூ.5.26 கோடி செலவில் திட்டங்கள் செயல்படுத்துவதற்கு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. அதற்கான பணிகளும் மிக விரைவில் தொடங்கப்படும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.துரைராஜ், மாமன்ற உறுப்பினர் ப.சுப்பிரமணி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர், கழக தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஆலந்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர், குரு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் த.மோ.அன்பரசன், கழகச் செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். உடன் மண்டல குழு தலைவர், தெற்கு பகுதி கழக செயலாளர் என்.சந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு.டி.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், கீதாஆனந்தன், மற்றும் பகுதிகளாக நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் மாமன்ற உறுப்பினர்கள் பகுதிவட்டஅனைத்து அணிகளின் நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள்நிர்வாகிகள் கழகத்தொகை கலந்து கொண்டு சிறப்பித்தினார்கள். இறுதியில் பகுதி இளைஞனை அமைப்பாளர் கோ பிரவீன் குமார் நன்றியுரை உரையாற்றினார்.

தொழிலாளர் நல வாரியம் சார்பில்

2.42 இலட்சம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் !

அமைச்சர் சி.வெ.கணேசன் தகவல்!

சென்னை,மார்ச்.8- தமிழ்நாடு அமைப்பு சாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தின் 7வது கூட்டம் மற்றும் தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல வாரியத்தின் 5வது கூட்டம் நேற்று (07.03.2025) சென்னை தேனாம்பேட்டை தொழிலாளர் நல வாரிய கருத்தரங்கு கூடத்தில் தலைவர் / மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் முனைவர் ஆ.திவ்வியநாதன் வரவேற்றுப் பேசினார்.

தொழிலாளர் நலத்துறையின் கீழ் செயல்படும் 20 அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியங்களில் தற்போது 47,23,393 தொழிலாளர்கள் பதிவு செய்து பயனடைந்து வருகின்றனர். பதிவு பெற்ற அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, கண்கண்ணாடி, இயற்கை மரணம், விபத்து மரணம், ஈமச்சடங்கு, விபத்து ஊனம், முடக்க ஓய்வூதியம் மற்றும் மாதாந்திர ஓய்வூதியம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

தமிழ்நாடு அமைப்பு சாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள பெண்/திருநங்கை ஓட்டுநர்கள் சொந்தமாக ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்குவதை ஊக்குவிக்கவும், அவர்களுக்கான சுய தொழில் செய்யும் வாய்ப்பினை உருவாக்கிடவும், அவர்களது வாழ்வாதாரத்தை பெருக்கிடவும் 2022 2023 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் மேற்கண்ட வாரியத்தில் பதிவு பெற்ற 500 பெண்/ திருநங்கை ஓட்டுநர்களுக்கு புதியதாக ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்கும் பொருட்டு ரூ.1 இலட்சம் மானியம் வழங்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டு வழங்கப்பட்டது.

20242025ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பின் படி 1000 பெண்/திருநங்கை ஆட்டோ ஓட்டுநர்களுக்கு ஆட்டோ மானியம் வழங்கும் திட்டம் மேலும் விரிவுப்படுத்தி ஆணை வெளியிடப்பட்டது. மேற்கண்ட திட்டத்தின் கீழ் 1500 பெண் பயனாளிகளுக்கு ரூபாய் 15 கோடி மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற நாள் முதல் ஓட்டுநர்கள் நல வாரியத்தில் 28.02.2025 வரை 1,02,978 பயனாளிகளுக்கு ரூ.79.06 கோடி மதிப்பபீட்டிலும் மற்றும் தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல வாரியத்தில் 31.01.2025 வரை 1,38,690 பயனாளிகளுக்கு ரூ.65.82 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலாளர் கொ.வீர ராகவ ராவ் தொழிலாளர் ஆணையர் சி.அ.ராமன் , வேலையளிப்போர் பிரதிநிதிகள், தொழிலாளர்கள் தரப்பு பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இறுதியாக தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல வாரிய செயலாளர் த. தர்மசீலன் நன்றி தெரிவித்தார்.

அண்ணா நகர் மண்டலத்திற்குட்பட்ட

பணிமனை அலுவலகம் - 107 இடமாற்றம்!

சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை,மார்ச்.8- அண்ணா நகர் மண்டலத்திற்குட்பட்ட பணிமனை அலுவலகம் - 107 10.03.2025 (திங்கட்கிழமை) முதல் கீழ்க்கண்ட புதிய முகவரியில் செயல்படும் என்று குடிநீர்வாரியம் அறிவித்துள்ளது.

வ. எண் - பணிமனை எண் - தற்போதுள்ள அலுவலக முகவரி - புதிய அலுவலக முகவரி: 1 - 107 கதவு எண்.4, நரசிம்மன் தெரு, அமைந்தகரை, சென்னை-600 029. கதவு எண்.65, தண்ணீர் தொட்டி சாலை, எம்.எம்.டி.ஏ காலனி, அரும்பாக்கம், சென்னை-600 106.

எனவே, பொதுமக்கள் குடிநீர் மற்றும் கழிவுநீர் சம்பந்தப்பட்ட புகார்கள் மற்றும் குடிநீர் வரி / கட்டணம் செலுத்தவும் மேற்கண்ட புதிய முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி எண்கள் உதவிப் பொறியாளர் - 8144930106, துணை பகுதிப் பொறியாளர் - 8144930314.

இராயபுரம் சட்டமன்ற தொகுதியில் அமைந்துள்ள ஆர்.எஸ்.ஆர்.எம் மகப்பேறு மருத்துவ மனையில் ஸ்ரீராம் கணேசன் GLOBAL CHIEF COMMERCIAL OFFICER, REDINGTON GROUP நோயறிதல் கருவி அல்ட்ராசவுண்ட் சிஸ்டத்தை நன்கொடையாக இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி முன்னிலையில் வழங்கினார். உடன் ரோட்டரி கிளப் தலைவர் ஜி. செல்ல கிருஷ்ணா அவர்களும், செயலாளர் ராஜேஷ் மணி அவர்களும், சமூக சேவை இயக்குனர் ஏ.எம். விஸ்வநாதன், அவர்களும் தலைவர் பரத் புஜாரா அவர்களும், ஆர்.எஸ்.ஆர்.எம். டாக்டர் மகேஷ் கண்காணிப்பாளர் சாந்தி இளங்கோவன், மருத்துவ துறை பேராசிரியர்கள், செவிலியர்கள், பொதுப்பணித்துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 170 வது அ வட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்ருமான மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி சைதை கிழக்கு பகுதி செயலாளர் 13 வது மண்டலக்குழு தலைவருமான இரா. துரைராஜ் அறிவுறுத்தலின்படி வட்டக் கழக செயலாளர் கோட்டூர் கோ .சண்முகம் முன்னிலையில் கழிக்குன்றம் பிள்ளையார் கோவில் தெருவில் மகளிர் தொண்டரணி பகுதி அமைப்பாளர் ஜெ.கௌசல்யா ஏற்பாட்டில் கழகக் கொடி ஏற்றி காலை உணவு வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இதில் வட்டக் கழகச் செயலாளர் கோட்டூர்புரம் க. மணி, மாவட்ட பிரதிநிதி மு. மகேஷ் லாரன்ஸ், எஸ்.கர்ணன், மு .பலராமன், க .ரகுநாதன், எம். குமார், பா.சிவலிங்கம், ஏ. விக்டோரியா அன்பு, ஆர். நரசிம்மன், கே. கோவிந்தராஜு, பி .குமார், எம்.ஆர். பாபு, க.ராஜன், என்.ரவி, சு.சுகுணா, க.சுப்பிரமணி, மூ. ராமு, வழக்கறிஞர் கோ. முத்துசாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

கழக தலைவர் – முதல்வர் 72–வது பிறந்தநாளை முன்னிட்டு

நீலகிரி மாவட்டத்தில் தொடர் பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள்!

மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு அறிவிப்பு!

நீலகிரி,மார்ச்.8- கழக தலைவர், தமிழக முதல்வர் அவர்களின் 72-வது பிறந்தநாளை முன்னிட்டு நீலகிரி மாவட்டத்தில் பொதுக்கூட்டங்கள் மற்றும் தெருமுனை பிரச்சார கூட்டங்கள் கீழ்குறிப்பிட்டுள்ள பட்டியல்படி தொடர்புடைய நகர- ஒன்றிய கழக அமைப்புகள் சார்பில், தலைமை கழக சொற்பொழிவாளர்கள் சிறப்புரையாற்ற நடைபெற உள்ளது என மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு அறித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:

பொதுக்கூட்டங்கள்

17.3.2025 குன்னூர் நகர கழகம் வி.பி.தெரு, குன்னூர் காவேரிபட்டினம் இளையராஜா, 18.3.2025 உதகை நகர கழகம் ஏ.டி.சி சுதந்திர திடல், உதகை கந்திலி கரிகாலன், 22.3.2025 குன்னூர் ஒன்றிய கழகம் சேலாஸ் தமிழ்கொண்டான், 23.3.2025 உதகை வடக்கு ஒன்றிய கழகம் கூக்கல் தொரை கோவை துரைமுருகன், 24.3.2025 கோத்தகிரி ஒன்றிய கழகம் மார்கெட் திடல் சேலம்சுஜாதா ஆடுதுரை உத்திராபதி, 25.3.2025 மேலூர் ஒன்றிய கழகம் தூதூர்மட்டம் திருப்பூர் கூத்தரசன், 30.3.2025 கூடலூர் நகர கழகம் காந்தி திடல், கூடலூர் சேலம் கோவிந்தன், 30.3.2025 கீழ்கோத்தகிரி ஒன்றிய கழகம் கீழ் கோத்தகிரி பசும்பொன் ரவிசந்திரன்,

தெருமுனை பிரச்சார கூட்டங்கள்

12.3.2025 பந்தலூர் கிழக்கு ஒன்றிய கழகம் குந்தலாடி நெலாக்கோட்டை பிதர்காடு பாக்கனா பஜார் தா.பழூர் இளஞ்செழியன், 16.3.2025 பந்தலூர் மேற்கு ஒன்றிய கழகம் ஒன்றிய பகுதி முழுவதும் பவானி கண்ணன், 20.3.2025 கூடலூர் ஒன்றிய கழகம் மசினகுடி பாட்டவயல் எழும்பூர் கோபி, 25.3.2025 உதகை தெற்கு ஒன்றிய கழகம் ஒன்றிய பகுதி முழுவதும் போடி காமராஜ், 30.3.2025 நெல்லியாளம் நகர கழகம் நெல்லியாளம் பந்தலூர் உப்பட்டி நாடுகாணி முரசொலி மூர்த்தி,

மேற்கண்ட பொதுக் கூட்டங்கள் மற்றும் தெருமுனை கூட்டங்கள் அனைத்தும் எழுச்சியோடு நடைபெற தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் சம்மந்தப்பட்ட நகர கழக, ஒன்றிய கழக செயலாளர்கள் செய்வதோடு, கூட்டங்களில் அந்தந்த நகர, ஒன்றிய கழகங்களுக்கு உட்பட்ட அனைத்து கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் ,குறு–சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய அவைத் தலைவர் எம். சக்தி தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர், மூவரசம்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் ஜி.கே. விவேகானந்தன் (எ) ரவி முன்னிலையில் புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அவசர செயல் வீரர்கள் கூட்டம் நேற்று (07.03.2025 வெள்ளிக்கிழமை) கலைஞர் அரங்கங்கத்தில் (மூவரசம்பட்டு பஞ்சாயத்து அலுவலகம் அருகில்) நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருகின்ற மார்ச் 10 மற்றும் 11 தேதிகளில் செங்கல்பட்டில் நடைபெற உள்ள நிகழ்ச்சிக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பங்கேற்க இருப்பதால் விழாவிற்கு புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம் சார்பாக 2000 மேற்பட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பான வரவேற்பு அளிக்க ஒன்றிய செயலாளர் வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் ஒன்றிய துணை செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், ஒன்றிய குழு துணைத் தலைவர் ,கிளைச் செயலாளர்கள், இளைஞரணி, மாணவரணி, அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் , மகளிர் அணி மற்றும் கழக அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.